சுட்டெண்: ........................... வகுப்பு: ...........................

**தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் -II**


- **1ம் வினா உட்பட 05 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**
- **முதலாம் வினாவுக்கு 20 புள்ளிகளும் ஏனைய வினாக்களுக்கு 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.**

01. கீழே தரப்படுகின்ற வினாக்களுக்கு விடையளிக்குக.

1) துணைத்தேக்கச்சாதனங்களை அடிப்படையாகக் கொண்டு கீழுள்ள அட்டவணையினை ஒவ்வொரு உதாரணங்களுடன் பூரணப்படுத்துக.

| காந்த ஊடக சாதனம் | ஒளியியல் ஊடக சாதனம் | திண்மநிலைச் சாதனம் |
|---|---|---|
| | | |

2) கீழே தரப்படுகின்ற தர்க்கப்படலைக்குரிய மெய்நிலை அட்டவணையினை எழுதுக.




3) இரண்டாம் தலைமுறைக் கணினிகளோடு ஒப்பிடும் போது ஐந்தாம் தலைமுறைக் கணினிகளில் காணப்பட்ட சிறப்பியல்புகள் 4 தருக?

4) தற்காலத்தில் Floppy disk ஏன் பொருத்தமற்றது என்பதற்கான இரு காரணிங்களைக் குறிப்பிடுக.

5) பயனர் இடைமுகத்தின் வகைகள் இரண்டையும் குறிப்பிடுக.

6) கணினித்துறைகளை அடிப்படையாகக் கொண்டு இணைக்க.

| A | B |
|---|---|
| a. கணினித்திரை | 1. PS/2 துறை |
| b. அச்சுப்பொறி | 2. HDMI துறை |
| c. மொடம் | 3. சமாந்தர துறை |
| d. சாவிப்பலகை | 4. RJ45 துறை |


7) இணையத்தின் பயன்பாடுகள் 2 தருக?

8) கீழே தரப்படுகின்ற அட்டவணையானது சொல்முறைவழிப்படுத்தல் ஆவணமொன்றை வடிவமைப்பதற்கு முன்னரும் வடிவமைத்ததற்கு பின்னரும் உள்ளதாகும்.

| **வடிவமைக்க முன்னர்** | **வடிவமைத்த பின்னர்** |
|---|---|
| ICT Society<br>ICT society of C/Hindu College have decided to do a following tasks in the academic year of 2018.<br>GIT Seminars<br>O/L ICT Seminars<br>ICT Exhibition<br>IT Day<br>Source: https://www.hcc.lk/ICT_Society | **ICT Society** ← 1<br>*ICT society of C/Hindu College have decided to do a following tasks in the academic year of 2018.* ← 2<br>• GIT Seminars<br>• O/L ICT Seminars<br>• ICT Exhibition<br>• IT Day ← 3<br>Source: <u>https://www.hcc.lk/ICT_Society</u> ← 4 |


A தொடக்கம் N வரை பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வடிவமைப்பு கருவிகளிலிருந்து பொருத்தமான வடிவமைப்பு கருவிகளைத் தெரிவு செய்க.

குறிப்பு: பொருத்தமற்ற கருவிகளின் பெயர்கள் வழங்கப்பட்டிருப்பின் புள்ளி வழங்கப்படமாட்டாது.




9) ஓர் எண்ணானது ஒற்றை எண்ணா அல்லது இரட்டை எண்ணா எனக் கண்டுபிடிப்பதற்கான போலிக்குறிமுறை தரப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு பாய்ச்சட்கோட்டில் A,B,C,D வெற்றிடங்களை நிரப்புக.


```
Begin
        input n
        if n mod 2 = 0 then
        display "even no"
        else
        display "odd no"
        end if
end
```




10) மென்பொருள்களின் பயன்பாடுகளுக்கேற்ப இணைக்க. (2 புள்ளி)

| | |
|---|---|
| a. வரைபு மென்பொருள் | i. Windows movie maker |
| b. ஒளியியல் அசைவூட்ட மென்பொருள் | ii. GIMP |
| c. ஒலித்தொகுப்பு மென்பொருள் | iii. Vectorian Giotto |
| d. காணொளி தொகுப்பு மென்பொருள் | iv. Audacity |

02. 1. தரப்பட்டுள்ள கணிணியின் கட்டமைப்பை அடிப்படையாக கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.




a) E,F,G எனப் பெயரிடப்பட்டுள்ள கூறுகளுக்கு பொருத்தமான 2 சாதனங்கள் வீதம் தருக. (3 புள்ளிகள்)

b) C,D இன் தொழிற்பாடுகளை தனித்தனியே தருக. (2 புள்ளிகள்)

c) A இன் தொழிற்பாட்டினை குறிப்பிடுக. (1 புள்ளிகள்)

2. கீழ்வரும் மெய்நிலை அட்டவணையைப் பூர்த்தி செய்க. (4 புள்ளிகள்)

| A | B | C | A AND B | B OR (A AND C) |
|---|---|---|---|---|
| 0 | 0 | 0 | | |
| 0 | 0 | 1 | | |
| 0 | 1 | 0 | | |
| 0 | 1 | 1 | | |
| 1 | 0 | 0 | | |
| 1 | 0 | 1 | | |
| 1 | 1 | 0 | | |
| 1 | 1 | 1 | | |

03. கீழே தரப்பட்டுள்ள விரிதாள் சிற்றூண்டிச்சாலையொன்றில் உள்ள கொள்வனவு பற்றிய விபரமாகும்.

| ◢ | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1 | Item | Unit Price | Quantity | Value | Sale Price |
| 2 | Bread | 50.00 | 50 | | |
| 3 | Cake | 100.00 | 20 | | |
| 4 | Juice | 30.00 | 200 | | |
| 5 | Rolls | 25.00 | 50 | | |
| 6 | Chocolate | 10.00 | 100 | | |
| 7 | Bun | 15.00 | 100 | | |
| 8 | | | | | |

1. மொத்த கொள்வனவு எண்ணிக்கையை காண்பதற்கு C8 இல் எழுதப்பட வேண்டிய சார்பு யாது?
2. Bread இற்குரிய Value ஐ காண்பதற்கு கலம் D2 இல் எழுதப்பட வேண்டிய சூத்திரம் யாது?
3. ஏனைய பொருட்களின் Value ஐ காண்பதற்கான படிமுறையை எழுதுக
4. Unit Price பெறுமதியில் 5% இலாபம் வைத்து பொருட்கள் விற்பனை செய்தால் கலம் E2 இல் எழுத வேண்டிய சூத்திரம் யாது?
5. மேற்கூறிய தரவுகளை காட்டுவதற்கான பொருத்தமான 2 வரைபுகளைப் பெயரிடுக.

(2X5 =10 புள்ளிகள்)

04. தரம் 10 இல் உள்ள மாணவர்கள் புள்ளி விபரங்கள் பற்றிய தரவுத்தள அட்டவணை வருமாறு

Student Table

| Stu_ID | Student Name | Grade | DOB |
|---|---|---|---|
| S0001 | Karthik | 11A | 10/05/2003 |
| S0002 | Sharan | 11C | 10/02/2003 |
| S0003 | David | 11A | 20/03/2003 |
| S0004 | Asam | 11B | 02/01/2004 |

Result Table

| Stu_ID | Sub_Code | Result |
|---|---|---|
| S0001 | Sub001 | A |
| S0002 | Sub001 | B |
| S0003 | Sub002 | B |
| S0004 | Sub003 | C |

Subject Table

| Sub_code | Subject |
|---|---|
| Sub001 | ICT |
| Sub002 | English |
| Sub003 | Maths |

1. முதன்மைச்சாவிகள் 2 ஐ அதன் அட்டவணையின் பெயர்களுடன் தருக. (2 புள்ளிகள்)
2. அந்நியச்சாவிகளையும் அதன் அட்டவணைகளையும் தருக. (2 புள்ளிகள்)
3. Science எனும் பாடம் புதிதாக சேர்க்கப்பட்டால்
   a) இற்றைப்படுத்தவேண்டிய அட்டவணை/ அட்டவணைகள் யாவை? (2 புள்ளிகள்)
   b) இற்றைப்படுத்த வேண்டிய பதிவுகளை அட்டணையில் காட்டுக. (2 புள்ளிகள்)
4. புதிதாக சேர்த்த பாடத்தில் அனைத்து மாணவர்களும் B சித்தி பெற்றனர் எனின் இற்றைப்படுத்தவேண்டிய பதிவுகளை அட்டவணையில் காட்டுக. (2 புள்ளிகள்)

05. 1. கீழுள்ள URL இன் பகுதிகளை இணைக்க (3 புள்ளிகள்)

http//:www.edupub.gov.lk/e-books/English/ict.pdf

| A | B |
|---|---|
| a) http | i. வளம் அமைந்துள்ள இடம் |
| b) www | ii. ஆள்களப்பெயர் |
| c) edupub.gov | iii. வளக்கோப்பு |
| d) .lk | iv. உலகளாவிய வலை |
| e) e-books/English | v. உயர்மட்ட ஆள்களப்பெயர் |
| f) ict.pdf | vi. செம்மை நடப்பு வழக்கு |

2. இணையத்தின் சேவைகளை பட்டியல்படுத்துக. (3 புள்ளிகள்)
3. CC,BCC இடையிலான வேறுபாட்டை தருக. (2 புள்ளிகள்)
4. முகில் கணிணி எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்துக. (2 புள்ளிகள்)

06. 1. கைமுறைத் தகவல் முறைமை (MIS), கணிணி தகவல் முறைமை (CBIS) ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக? (2 புள்ளிகள்)

2. ‘‘குமார் தனது நிறுவனத்தின் நிதி நடவடிக்கைகளையும், கணக்கறிக்கைகளையும் ஏடுகளில் பதிவு செய்வதனூடாக மேற்கொண்டு வந்தார். இதற்காக குமார் உதவிக் கணக்காளர் ஒருவரினையும் நியமித்திருந்தார். குறிப்பிட்ட சில மாதங்களின் பின்னர் நிறுவன வணிக நடவடிக்கைகள் விருத்தியடைந்தன. வாடிக்கையாளர்களும் அதிகரித்த காரணத்தினால் நிறுவனத்தின் நிதியறிக்கைகள் தயாரிப்பதில் தாமதம், செம்மையின்மை மற்றும் அதிகரித்த வேலைப்பழு போன்ற குறைபாடுகள் குமாரினால் அவதானிக்கப்பட்டது. இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக குமார் கணிணி செய்நிரலாளர் ஒருவரினது உதவியினை நாடுகின்றார்.’’

   a) குமார் தனது நிறுவனத்தின் செயற்பாடுகளிலுள்ள குறைபாடுகளை கண்டறிவதற்காக பயன்படுத்திய முறை யாது? (2 புள்ளிகள்)
   b) பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக உருவாக்கப்பட்ட கணிணி மென்பொருளினை நிறுவுவதற்கான (Install) மிகவும் பொருத்தமான நிறுவுதல் முறை எது? காரணம் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
   c) ஊடாட்ட விருத்தி மாதிரியம் பயன்படுத்துவதினூடாக மேற்குறித்த மென்பொருள் விருத்தி செய்யப்பட்டது எனின் இம்மாதிரியம் தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணம் 2 இனைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

3. முறைமையைப் பராமரிக்கும் போது விருத்தி செய்யப்பட்ட முறைமையில் மேற்கொள்ளக்கூடிய மாற்றங்களுள் ஒன்றினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

07. பின்வரும் பஸ்கால் செய்நிரலினை கருத்திற்கொள்க.

```
1.        program project1:
2.        var c : integer;
3.
4.        begin
5.             writeln("Enter the Temperature :");
6.             readln(c);
7.             if c > 20 then
8.             writeln("HOT Climate")
9.             else
10.            writeln("COOL Climate");
11.
12.       readln();
13.       end.
```

a) மேற்தரப்பட்ட பஸ்கால் செய்நிரலுக்குரிய போலிக்குறிமுறையினை எழுதுக? (5 புள்ளிகள்)

b) மாறி c இற்கான பெறுமானமாக 30 இனை உள்ளீடாக வழங்கினால் மேலுள்ள பஸ்கால் செய்நிரலின் வெளியீடு எதுவாக அமையும்? (2 புள்ளிகள்)

c) மேற்தரப்பட்ட பஸ்கால் செய்நிரலில் **6, 7** வது வரிகளில் உள்ள குறிமுறையினை பாய்ச்சல் கோட்டுப் படத்தில் காட்டுவதற்காக பயன்படுத்தப்படும் உருக்களை வரைந்து அதனுள் வரும் கூற்றுக்களையும் எழுதிக் காட்டுக.

line 6 → ……………………………

line 7 → …………………………… (3 புள்ளிகள்)

******